குழித்துறை மறைமாவட்டம்
அன்பியங்களின் தொடர்பிதழ்

# அடித்தளம்

மலர் : 21
மார்ச் 2026
இதழ் : 3



## உள்ள மாற்றம் முதல்
## உலக மாற்றம் வரை...

# ஆசிரியர் குழு

அருள்பணி. M. ஆல்வின் விஜய்

வேதியர் M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்

# உள்ளே →


- இயக்குநரிடமிருந்து...
- குடும்பத்தின் முன்மாதிரி லீலி மலரே

  திரு. S. பிரான்சிஸ் கென்னடி
- பெண்கள் வீட்டின் கண்கள்

  திருமதி. லதா

---

- புனித பிரான்சிஸ் அசிசியார்

  திரு. S.T. டேவிட் ராஜ்
- குருத்தோலையோடு எருசலேமில் நுழையும் இயேசு இதயம் என்னும் எருசலேமில் இயேசுவை வரவேற்காலமா?

  அருள்பணி. சி. எட்வின் ராஜ்
- நேரம் இருக்கு ஆனா இல்லை

  திரு. N.K. ரெஞ்சித்
- குறிக்கோளை குறித்து வைத்து கொள்ளுங்கள்

  திருமதி. E. பிளாரன்ஸ் ஜெயா
- புனித லாரன்ஸ்

  வேதியர். மா. பேபிகமலா
- சடுகுடு

  திரு. K. ஆல்பின் ஜோஸ்
- அன்பிய இறைமக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
- திருமண சம்மதம் உண்மையானதா? போலியானதா? என்பதை எவ்வாறு கண்டுகொள்வது
- தவக்காலத்தில் நான்
- நலத்திட்டங்கள்
- ஞாயிறு வழிபாடுத் தயாரிப்போம்

## இயக்குநரிடமிருந்து...



**இ**றைஇயேசுவில் அன்பார்ந்தவர்களே, வாழ்வை மீண்டும் பதப்படுத்த வாய்ப்பு அருளும் தவக்காலத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். தவமும், தானமும், செபமும் நாற்பது நாட்கள் என்ற வரைமுறையோடு நின்றுவிடாமல் வாழ்நாளோடுப் பயணிக்க வாழ்த்துகிறேன்.

**"ம**ண்ணில் மடிந்த விதை முளைத்துச் செடியாக விருட்சமடைகிறது". அதுபோல மனித வாழ்வுக்காகத் தன்னையே அர்ப்பணித்த இறைமகனின் பாடுகளை நினைவுகூர்ந்து அவரது பாதையை ஏற்று வழிநடக்க நம்மை அழைக்கும் காலம் இத்தவக்காலம். பருவமழை பொழிந்து முடிந்ததும் காலம் மாறி கோடை காலத்திற்கு நகர்வது போல மனித வாழ்வும் தவக்காலம் மாறி பாஸ்கா காலம் வந்ததும் மாற்றமடைந்த மனமும் தோற்றுப் போகின்றது.

**ந**ற்செய்தியைப் பறைசாற்றி, இறைநம்பிக்கையை மக்களில் வேரூன்றச் செய்து, ஏழ்மையின் கோலத்தை ஏற்றுத் தன்னுயிரை ஈன்ற புனித பிரான்சிஸ் அசிசியாரின் ஆண்டை திருஅவையின் ஆண்டாகக் கொண்டாட அழைப்புவிடுக்கிறார் நம் திருத்தந்தை பதினான்காம் லியோ. புனித பிரான்சிஸ் அசிசியார் இயற்கையின் மீது பற்றுக்கொண்டவர். ஏழைகளின் மீது கரிசனை கொண்டு உதவிகள் புரிவதும், அமைதியற்ற மக்களிடையே இறைமகன் விட்டுச்சென்ற அமைதியை நிறைவாகப் பகிர்வதையும் அடித்தளமாகக் கொண்டவர். தவவாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அவரது ஆண்டைக் கொண்டாடும் அன்பிய மக்களாகிய நாம், அவர் நமக்கு விட்டுச்சென்ற பணிகளைப் பின்தொடர்வோம்.

குடும்பங்களில் அன்பையும், அமைதியையும் நிலைத்திருக்கச் செய்வோம். தேவையிலிருப்போரைக் கண்டறிந்து உதவிகரம் நீட்டுவோம். ஒறுத்தல் முயற்சிகளை மனமார மேற்கொள்வோம். நற்செய்தியை அன்பியங்களிலும், குடும்பங்களிலும் பறைசாற்றி, உள்ளத்தில் மாற்றம் பெற்று மனித மாண்போடு வாழ வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. M. ஆல்வின் விஜய்
இயக்குநர், அன்பியப் பணிக்குழு


**YOU TUBE**

https://www.youtube.com/@anbiyamkuzhithuraidiocese945

**Website**

bcckuzhithurai.com

**E-mail ID**

bcckuzhithurai@gmail.com

**Office No.**

**+91 7358947467**

1-ம் வாரம்

# குடும்பத்தின் முன்மாதிரி

## லீலி மலரே!

திரு. S. பிரான்சிஸ் கென்னடி,

தலைவர், மறைமாவட்ட அன்பியப் பணிக்குழு





வெண்மையின் வெள்ளொளி -லீலி

நேர்மையின் நண்பன் -லீலி

தாழ்மையின் தாம்பூலம் - லீலி

நம்பிக்கையின் நன்னெறி - லீலி

ஆன்மீகத்தின் அழகு - லீலி

**பா**லஸ்தீனாவின் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும், சாரோன் சமவெளிகளிலும் முட்களுக்கிடையில் வெண்மை நிறத்தில் காணப்பட்ட "மடோனா லில்லி" என்ற மலரே லீலி என்று பெயர் பெறுகிறது. தமிழில் லீலி என அறியப்படும் மலர். ஆங்கிலத்தில் "லில்லி" என்று எழுதப்படுகிறது. அன்னைமரிக்கு இறைவிருப்பத்தை அறிவிக்க கபிரியேல் தூதர் அவர்முன் தோன்றி அவருக்கு வழங்கிய லீலி மலர் கொத்து, சூசைத்தந்தை மரியாளை ஏற்க மனமின்றி ஒரு காய்ந்த கம்பை எடுத்துச்செல்ல, ஆரோனின் கோல் கடவுளின் தேர்ந்தெடுப்பை உணர்த்துவதற்காய் பூத்து காய்த்ததைப் போன்று சூசைத்தந்தை எடுத்துச்சென்ற மரக்குச்சி லீலி மலர்களால் மலர்ந்தது. ஆக சூசைத்தந்தைக்கும், அன்னை மரிக்கும் கபிரியேல் தூதன் வழங்கிய லீலி மலர்கள், **இறைவனால் தேர்வு செய்யப்பட்டவர்கள்** என்பதை உறுதிச்செய்கின்றன.

**பு**னித சூசையப்பருக்கு மட்டுமே நம் திருச்சபை இரண்டு

விழாக்களை கொண்டாடுகிறது. மரவேலைச் செய்த தொழிலாளி என்பதால் **தொழிலாளர்களின் பாதுகாவலர்**. மறுபுறம் **திருக்குடும்பத்தின் பரிபாலகர்** என்பதால் குடும்பங்களின் பாதுகாவலர். உலக குடும்பங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக திகழ்வது திருக்குடும்பமே. அப்படி நம் குடும்பங்களுக்கு எல்லாம் முன்மாதிரி நம் சூசைத்தந்தையே.

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது”** என்கிறது வள்ளுவம்.

அன்பு, அறம், நேசம், பாசம், நற்பண்பு, ஒழுக்கம், பிறரை மதித்தல், தர்மம் இவை குடும்ப வாழ்க்கையில் இருந்தால், அந்த வாழ்க்கை மேன்மைமிக்கதாய் இருக்கும். இவை யாவற்றையும் ஒருங்கே அமைந்த **யோசேப்பு நேர்மையாளர்** (மத் 1:19) என்கிறது விவிலியம். ஆண்டவரின் தூதர் தனக்கு கனவில் தோன்றி "யோசேப்பே தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம்" ஏனெனில், அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான் என்று கூறியவுடன், சூசை அதை நம்பி அவ்வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார். மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாத உள்ளம், கபிரியேல் தூதரின் வாக்குகளை நம்புதல், இறைசித்தத்திற்கு தன்னை கையளித்தல், பாலன் இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க எருசலேமிற்கு வருதல், பாஸ்கா விழாவைக் கொண்டாடிட தங்கள் நாட்டிற்கு வருதல், காணாமல் போன இயேசுவை தேவாலயத்தில் கண்டுபிடித்தல் இப்படி ஒரு தந்தை எப்படி இருக்க வேண்டும் என்பதை சூசை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

**த**னக்கென எந்த அடையாளத்தையும் வைத்துக்கொள்ளாமல், தன் அடையாளத்தை தன் குடும்பத்திற்காய் பகிர்ந்தளித்து,

உழைப்பதே சிறப்பு என்று, உள்ளன்பால் தம் குடும்பத்தினரை கட்டிக்காத்து தமக்குப்பின் தன் கடமையை, பொறுப்பை, சரிவரச்செய்ய தாங்குவோராக தம் தலைமுறைக்கும் கற்றுக்கொடுப்பவரே குடும்பத்தின் முன்மாதிரியாக இருக்க முடியும்.

**கு**டும்பத்தில் பிள்ளைகளின் முதல் ஹீரோ தந்தை. தந்தை எவ்வழியோ, தனயனும் அவ்வழி. தந்தையின் சாயலை மட்டுமே குழந்தைகள் பெற்றிருப்பதில்லை. அவருடைய மனநிலை, செயல் அத்தனையையும் பிரதிபலிப்பவர்கள் அவ்வீட்டின் குழந்தைகளே. தந்தையர்களை தங்கள் ஹீரோக்களாக எண்ணிய குழந்தைகளை ஹீரோக்களாக சித்தரிக்க வைப்பதும் தத்தம் தந்தையர்களே. குணவாளனான குடும்பத்தலைவர்கள் தங்கள் குடும்பங்களை மணமிக்க மாலையாக்குகின்றனர். குடிகார தந்தையர்கள் தங்கள் குடும்பங்களை குப்பை மேடாக்குகின்றனர். ஆக, குடும்பங்களை கதம்பங்கள் ஆக்குவது தந்தையர்களின் கடமை. அப்படிப்பட்ட திருக்குடும்பத்தின் முன்மாதிரி நம் சூசைத்தந்தை. அவரையே நம் மாதிரியாய் கொண்டு, லீலி மலரை நம் இல்லத்தோட்டங்களில் மலரச்செய்வோம்!

**அனைவருக்கும் புனித சூசைத்தந்தையின்**

**திருவிழா நல்வாழ்த்துக்கள்!!!**

2-ம் வாரம்

# பெண்கள்

## வீட்டின் கண்கள்



திருமதி. லதா
பெண்கள் பணிக்குழு

**பெ**ண்கள் வீட்டின் கண்கள், நாட்டின் கண்கள், பெண் இல்லாத குடும்பத்தில் சந்தோஷம் இல்லை என்று பெண்ணை கொண்டாடும் இந்நாட்டில், நதிகளெல்லாம் பெண்ணின் பெயராக, அன்னை பூமி, தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் குறிப்பிடும் இந்த காலகட்டத்தில் பெண்ணானவள் வீட்டில், சமுதாயத்தில், நாட்டில் எவ்வாறு மதிக்கப்படுகிறாள் என்பதை ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.



**நா**ம் எவ்வளவுதான் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருந்தாலும் பெண் என்ற முறையில் வீட்டிலிருந்து வெளியில் வரவேண்டும் என்றால் எத்தனை கட்டுப்பாடுகள் நமக்கு விதிக்கப்படுகிறது. காரணம் கேட்டால் பெண் பிள்ளையை வெளியில் அனுப்புவது வயிற்றில் புளியை கரைப்பதுபோல் என்றுக் கூறுகிறார்கள். பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை என்பதை இந்த கருத்து உணர்த்துகிறது.

**ச**மீபத்தில் மீடியாவில் வந்த ஒரு தகவல் 2026-ஆம் ஆண்டு அதாவது இந்த ஆண்டு சனவரி மாதம் முதல் இரண்டு வாரத்தில் மட்டும் தலைநகர் டெல்லியில் 509 பெண் குழந்தைகள் காணாமல் போயிருக்கிறார்கள். அப்படி என்றால் நாடு முழுவதும் எத்தனை பெண் குழந்தைகள் காணாமல் போயிருப்பார்கள் என்பதை யோசிக்க வேண்டும். இன்று அனைத்து துறைகளிலும் அதாவது

(அடுப்படி முதல் அரசியல் வரை) பெண்ணானவள் தனிப்பெரும் சக்தியாக ஒளிர்ந்து கொண்டிருக்கிறாள்.

**சு**தந்திரப் போராட்டம் முடிந்த காலகட்டத்தில் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டக் குழுவில் 15 பெண்கள் இருந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை வரலாறு குறிப்பிடுகிறது. இவ்வாறு ஒரு சமூகத்தையே, நாட்டையே வழிநடத்திய பெண்களை, வீட்டுக்குள்ளே அடக்கி பலவித கட்டுப்பாடுகளை சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கலாச்சாரத்தின் பெயரால் என பலவித கருத்துக்கள் புகுத்தப்படுகிறது. இதன் வெளிப்பாடுகள்தான் மனித மிருகங்கள் பெண்களை பலவித கொடுமைகளுக்கு உட்படுத்துகிறார்கள். அதன் உச்சக்கட்டம் பெண்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யும் செயல்கள்.

**பெ**ண்கள் வீட்டின் கண்களாக நாட்டின் கண்களாக இருக்க வேண்டும் என்றால் நமது பெண்களை, குழந்தைகளை மதிப்போம். அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை உறுதி செய்வோம். என்றால்தான் கடவுளின் படைப்பில் ஆணும் பெண்ணும் சமமானவர்கள், இணையானவர்கள் என்று விவிலியம் கூறும் கருத்து உண்மையாகும்.

3-ம் வாரம்

# புனித பிரான்சிஸ் அசிசியார்

திரு. S.T. டேவிட் ராஜ்
களப்பணியாளர்





**பு**னித பிரான்சிஸ் அசிசியார் இத்தாலி நாட்டில் கி.பி 1181 ஆம் ஆண்டில் பொருள் செல்வங்கள் நிறைந்த ஒரு வணிகர் குடும்பத்தில் பிறந்தார். பின்பு இயேசுவின் போதனைகளால் ஈர்க்கப்பட்டதும் தனது சொத்துகள் அனைத்தையும் துறந்து "புனித ஏழ்மை" என்பதை ஒரு நற்குணமாக ஏற்று இயேசுவைப்போல வறுமையை தழுவி துறவறவாழ்வை மேற்கொண்டார். அமைதியின் தூதுவர் என்று அழைக்கப்படும் இவர் பகையுள்ள இடத்தில் பாசத்தையும் வேதனையுள்ள மனதில் மன்னிப்பையும் விதைப்பவராக மாறினார்.

**ம**னித வாழ்வில் அமைதி என்பது எவ்வாறு உருவாகிறது என்பதற்கு, செபம் வழிதான் அமைதி உருவாகிறது என்பதை எந்த ஐயப்பாடும் இன்றி "அமைதி செபம்" என்று உறுதியாக எடுத்துரைத்தார்; இன்றும் உலகெங்கும் ஒலிக்கிறது. இவர் பணிவு உடையவராக இருந்ததற்கு எடுத்துக்காட்டு தன்னை ஒரு சாதாரண திருத்தொண்டராகவே கருதினார். குருப்பட்டம் பெற தான் தகுதியற்றவர் என்று கருதும் அளவிற்கு மிகுந்த பணிவு உடையவராக இருந்தார். புனித அசிசியார் மகிழ்ச்சியின் வாழ்வு வாழ துன்பங்கள் மற்றும் வறுமையை ஏற்றுக்கொண்டு

மகிழ்ச்சியுடனும், புன்னகையுடனும் வாழ்வது ஒரு நல்ல பண்பாக கொண்டிருந்தார். இவர் தன்னிடம் இருந்த அனைத்தையும் மற்றவர்களுக்கு பகிர்ந்து அளிப்பதை நற்செய்தியின் இதயமாக கருதினார். இவர் ஆண்டவரின் படைப்புகளை மிகவும் நேசித்தார். எடுத்துக்காட்டு கதிரவன், நிலவு மற்றும் விலங்குகளை தன் சகோதர, சகோதரிகளாக நினைத்து பாடியவர். சுற்றுச்சூழலின் பாதுகாவலராகவும் இவர் போற்றப்படுகிறார். எனவே, நமது திருஅவை 2026 ஆம் ஆண்டினை அசிசியார் ஆண்டாக கொண்டாடும் இந்த நேரங்களிலும் மற்றும் அனைத்து காலங்களிலும் ஆண்டவரின் படைப்புகள் அனைத்தையும் சகோதர, சகோதரி என்ற எண்ணத்துடன் மகிழ்ச்சியின் வாழ்வு வாழ நாம் அன்பியமாய் இணைந்து வருவோம்.

4-ம் வாரம்

## குருத்தோலையோடு எருசலேமில் நுழையும் இயேசு

இதயம் என்னும் எருசலேமில் இயேசுவை வரவேற்கலாமா?

**அருள்பணி. எட்வின் ராஜ் சி.**



**கு**ருத்தோலை ஞாயிறு, பாடுகளின் ஞாயிறு, ஓசன்னா ஞாயிறு என்று பல பரிணாமங்களையும் ஆழமான அர்த்தங்களையும் சுமந்து வரும் இந்த நாள் இயேசுவின் வாழ்விலும், இஸ்ரயேலின் வரலாற்றிலும், இன்று, ஒவ்வொரு கிறித்தவர்களின் வாழ்விலும் திருப்புமுனையாக அமைந்த அல்லது அமையும் ஒரு வரலாற்று நிகழ்வாகவே இருக்கிறது. இயேசு செய்த எருசலேம் நுழைவுப்புரட்சி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்து முடிந்த சாதாரண ஒரு நிகழ்வாக எந்த கிறித்தவராலும் கடந்து

செல்ல முடியாது. இன்று, இந்த நாள் நமக்கு ஒரு தனிப்பட்ட அழைப்பைத் தருகிறது. அன்று இஸ்ரயேல் மண்ணின் இதயமாக, மையமாக இருந்த எருசலேமில் இயேசு நுழைந்து அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கும், பணம் படைத்தவனின் வஞ்சகத்திற்கும், மதக்காவலர்களின் வெளிவேடத்திற்கும்



சவாலாக இருந்தார். அமைதியின் அரசர், அனைத்து கறைகளையும் களைந்துவிட வேண்டும் என்பதற்காக ஒலிவக் கிளைகளை தூக்கி எறிந்து சாட்டையை கையில் எடுத்தார். அதே இயேசு இன்று நம் இதயம் என்னும் எருசலேமில் நுழைய விரும்புகிறார். நாம் ஓசன்னா பாடி அவரை இதயம் என்னும் எருசலேமில் வரவேற்கத் தயாரா? இல்லை ஒழிக! ஒழிக! என்று நம் நேர்மையற்ற கறைபடிந்த ஓலங்களால் விரட்டி அடிக்க போகிறோமா?

1. **இயேசுவுக்கு வழிவிடுவோம்:**

**இதயத்தின் மேடுபள்ளங்களை சரிசெய்து...**

**இ**யேசுவின் எருசலேம் நுழைவுக்குமுன் பாதை சரிசெய்யப்பட்டது. அவரை நேசித்த மக்கள், எதிர்பார்த்து காத்திருந்த மக்கள் அனைவரும் தங்கள் மேலுடைகளை சிவப்புக் கம்பளமாய் தரையில் விரித்து பாதையை தயார் செய்தார்கள் அமைதியின் அரசருக்காக. ஓசன்னா (எங்களை மீட்டருளும்) என்று பாடி ஒலிவக் கிளைகளை தரையில் பரப்பினார்கள் தங்கள் மீட்பருக்காக. சில நேரங்களில் நம் உள்ளமென்னும் எருசலேம் கவலைகளால், கட்டுப்பாடற்ற ஆசைகளால், கடந்து செல்ல முடியாத பகைமைகளால், கட்டுப்படுத்த முடியாத பராக்குகளால், கட்டுக்

கடங்கா இரைச்சல்களால் புதர்பிடித்த காடாய் மாறிக்கிடக்கிறது. யாரும் நம் உள்ளக்கிடங்கை பார்த்துவிடக்கூடாது என்று புதர்களால் மறைத்தே வைத்துவிடுகிறோம். நம் இதயத்தின் இருளுக்குள் இருக்கும் சில பகுதிகளை கடவுள்கூட கடந்துவிடக்கூடாது என்று மூடியே வைத்து விடுகிறோம். இந்த குருத்தோலை ஞாயிறிலாவது நம் உள்ளங்களைத் திறந்து, புதர்களை களைந்து, இதயம் என்னும் எருசலேமில் நுழைய இயேசுவுக்கு வழிவிடுவோமே!

**இயேசுவுக்கு வழிவிடுவது என்பது:**

கசப்புகளைக் களைவது;

கர்வத்தை கரைப்பது;

பகைமை மறப்பது;

கடவுளோடு நடப்பது.

**2. இயேசுவை வரவேற்போம்: உள்ளங்களை உருமாற்றி...**

**கு**ருத்தோலை ஞாயிறு மகிழ்ச்சியான பவனியோடு தொடங்கி பாடுகளின் கனங்களோடு நிறைவுபெறுகிறது. திருஅவை வெற்றிப்பயணத்தையும் சிலுவைப் பாடுகளையும் அருகருகே வைத்திருக்கிறது. ஏன்? வாழ்க்கை எப்பொழுதும் எழுச்சி-மகிழ்ச்சி நிலையிலேயே இருந்துவிடுவதில்லை. இயேசுவின் ஆன்மீகமும் அதையே சொல்லித்தருகிறது. வெற்றி-தோல்வி, துன்பம்-இன்பம், ஏற்றம்-இறக்கம் அனைத்தும் அன்றாட வாழ்வின் எதார்த்தம் என்பதை உணர்த்துகிறது இந்த நாள். குருத்தோலைகளை கையில் ஏந்துவது எளிது. ஆனால், சிலுவை அடியில் இயேசுவோடு நிற்பது கடினம். அதுதான் ஓசன்னா பாடி வரவேற்றவர்கள் எல்லாரும் ஓடிப்போனார்கள். இயேசுவை வெற்றியின் அரசராகவும், தங்கள் வாழ்வை மாற்ற வந்த தலைவராகவும், துன்பங்களை தீர்க்கும் உடனடி தீர்வாகவும், எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் சூப்பர்மேன் அல்லது

சக்திமான் என்றும் நினைத்தார்கள். நாமும் அப்படித்தான் எதிர்பார்க்கிறோம். அதற்காகவே கொண்டாட்டங்களால் அவரை மகிழ்விக்க நினைக்கிறோம். அவர் நம் எதிர்பார்ப்புகளை உடைத்து கழுதைமேல் ஏறி அமைதியின் அரசராய் வருகிறார். நம் விருப்பத்திற்கு மாறாக சிலுவை சுமந்து கல்வாரி செல்கிறார். இயேசுவை நம் இதயத்தில் வரவேற்பது அவரை அவராக ஏற்றுக்கொள்வதே. மாறாக, நாம் விரும்புவதைப்போல அவரை கற்பனைச் செய்து நமக்குள் திணிப்பது அல்ல.

**உள்ளத்தை உருமாற்றுவது என்பது :**

வாழ்வை அப்படியே ஏற்பது;

எதார்த்தோடு வாழப் பழகிக் கொள்வது.

3. **இயேசுவை அனுமதிப்போம்:**

**நம் உள்ள கோவிலைச் சுத்தம் செய்ய...**

இயேசு எருசலேம் நுழைவில் செய்த முதல் புரட்சி ஆலயத்தை சுத்தம் செய்ததுதான். ஆலயத்திற்கு எவையெல்லாம் தேவையில்லையோ அனைத்தையும் வெளியேற்றினார். இயேசு நுழைந்த இடம் தூய்மையாகிறது. நம் இதயமும் இறைவன் உறையும் தூய ஆவியின் ஆலயமே. சில நேரங்களில் அந்த இதயம் சுயநல ஆசைகளால், சுட்டெரிக்கும் கோபங்களால், சரிக்கும் பொறாமைகளால், சோம்பல் ஆன்மீகத்தால் நிரம்பிவழியும் சந்தையாகிறது. இயேசு நுழைந்தால் அனைத்தையும் தூக்கி எறிந்து விடுவார் என்று தெரிந்தே அவரை இதய வாசலிலேயே வைத்து அனுப்பிவிடுகிறோம். அவர் சாட்டை எடுத்து சுத்தம் செய்யும்போது இழக்கவேண்டியதை நினைத்து கவலைப்படுகிறோம். அப்படியே நம் இதயச்சந்தை இரைச்சலோடு இருப்பதையே நாம் விரும்புகிறோம்.

**இயேசுவை அனுமதிப்பது என்பது :**

உள்ளம் மாறுவது;

உணர்வுகளைப் போற்றுவது; .

உறவுகளோடு வாழ்வது;

உள்ளத்தில் அவர் உறைவது.

**பவனி முடிந்தாலும் பயணம் முடிவதில்லை...**

"ஓசன்னா" என்பது இப்பொழுதே எங்களை மீட்டருளும் என்ற பொருள் தருகிறது. இந்த முழக்கம் வெறும் கடவுளுக்கு புகழ்ச்சி மட்டுமல்ல; கடவுளிடம் நம் வேண்டுதலும் கூட. கடவுளிடம் நாம் மீட்புக்காக வேண்டுகிறோம்; மாற்றத்திற்காக மன்றாடுகிறோம்; உருமாற்றத்திற்காக உரையாடுகிறோம்.

**எதிலிருந்து மீட்பு :** நம் பயங்களிலிருந்து; நம் குற்றங்களிலிருந்து; நம் சந்தேகங்களிலிருந்து; நம்பிக்கையின்மை யிலிருந்து, நம் செல்வம், பட்டம், பதவி சார்புகளிலிருந்து, நாம் ஓசானா என்று ஓங்கி மனதார சொல்லும்போது நம் இதயம் என்னும் எருசலேமின் கதவுகளை இயேசுவிற்காய் திறந்துவிடுகிறோம்.

குருத்தோலை பவனி இந்த ஆண்டும் முடிந்து கடந்து செல்லலாம்; குருத்தோலைகள் முடையப்பட்டு மூலைகளில் முடங்கிப்போகலாம்; உண்மையான குருத்தோலை ஞாயிறு பவனி அன்றாட வாழ்வில் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். இயேசுவை நம் உரையாடல்களில், உறவாடல்களில், உறவுகளில், பொறுப்புகளில், முடிவுகளில் மையமாக வைப்போம். இதயம் என்னும் எருசலேமில் அவரை நுழைய அனுமதிக்கும்போது, அன்றாடம் குருத்தோலை பவனியும், இயேசுவின் எருசலேம் நுழைவும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். நம் இதயத்தில் பாதையை சரிசெய்வோம்; இயேசுவை வரவேற்கத் தயாராவோம்; இரத்த சுத்திகரிப்பு உடலை துய்மையாக்கும். இதயம் சுத்திகரிக்க இயேசுவை அனுமதிப்போம். ஓசன்னா ஒரு மாற்றத்தை உருமாற்றத்தை தரட்டும். இந்த உயிர்ப்பு பெருவிழா நம் எல்லோருக்குமான, புது வாழ்வின் உயிர்த்தெழுதலாக இருக்கட்டும்!!!

# இளையோர் பக்கம்

# நேரம் இருக்கு ஆனா இல்லை

திரு. N.K. ரெஞ்சித்



**ஒ**ரு குறிப்பிட்ட வேலையை அல்லது செயலை ஒருவரிடம் செயல்படுத்த சொல்லும்போது எனக்கு நேரமே இல்லை. கூடுதலாக ஒரு மணி நேரம் கிடைத்தால் நன்றாக இருந்திருக்கும் எனப் பதில் மொழிகள் வருவதை நாம் கேட்டிருப்போம். நேரத்தை சேமிப்பதற்காக பல முறைகளில் தொழில் நுட்பங்கள்



வளர்ந்துள்ளன. ஆனால், இன்னும் நேரமில்லை என்னும் சொல்லாடல் நிரம்பி நிற்பதை உணர முடிகிறது. துரித உணவுகள். துரிதச் சேவைகள், துரிதப் பயணங்கள் எனத் துரிதங்களுக்கு குறைவும் இல்லை.

**R**eels, shorts குறுகிய நேரத்தில் நிறைய விடயங்களை சொல்லும் துரித வீடியோக்கள் சமூக வலைதளங்களில் நிறைந்துள்ளன. ஆனால், இன்னும் நேரமில்லை அல்லது நேரம் போதவில்லை என்ற குறை மட்டும் இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் நேரமில்லையா அல்லது நேர மேலாண்மை இல்லையா என்பதை சுய ஆய்வு செய்துகொள்வது அவசியமானது.

**இ**ன்றைய இளைஞர்களின் வாழ்க்கை வேகமும், போட்டியும் நிறைந்ததாக உள்ளது. சமூக வலைத்தளங்கள் அவர்களின் நேரத்தை பெரிதும் பிடித்துக் கொள்கின்றன. இத்தகைய சூழலில் நேர மேலாண்மை என்பது வெறும் திட்டமிடல் அல்ல. அது ஓர் உளவியல் திறனாகும்.

**உ**ளவியல் ரீதியாக பார்க்கும்போது, மனித மனம் உடனடி இன்பத்தை விரும்புகிறது. அதனால் தான் சமூக வலைத்தளங்கள். விளையாட்டுகள் போன்றவற்றில் நேரம் அதிகம் செலவிடப்படுகிறது. இதனை "தாமதப்படுத்தும் பழக்கம்" (Procrastination) என்று கூறுவர். இது மனஅழுத்தத்தையும் குற்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. எனவே. இளைஞர்கள் தங்கள் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**நே**ர மேலாண்மையில் "சுய கட்டுப்பாடு" முக்கியப் பங்கு வகிக்கிறது. ஓர் இலக்கைத் தெளிவாக நிர்ணயித்து, அதை சிறிய பகுதிகளாகப் பிரித்து செயல்பட்டால் மனம் சோர்வடையாது. மேலும், சிறிய சாதனைகளுக்கும் தங்களைப் பாராட்டிக் கொள்வது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். இது நேர்நிலை சிந்தனையை வளர்க்கும்.

**அ**தேபோல், போதுமான தூக்கம் மற்றும் உடற்பயிற்சி மனநிலையை சீராக வைத்திருக்க உதவுகின்றன. மனம் அமைதியாக இருந்தால் கவனம் அதிகரித்து, வேலைகளை விரைவாக முடிக்க முடியும். ஒழுங்கான வாழ்க்கை முறை, நல்ல பழக்கங்கள் மற்றும் தெளிவான சிந்தனை ஆகியவை நேர மேலாண்மையை வலுப்படுத்தும். புனித அன்னை தெரசா அவர்கள் "நேற்று போய்விட்டது; நாளை இன்னும் வரவில்லை; இன்று மட்டுமே நமக்குள்ளது ஆகையால் இன்று நன்மையை செய்யத் தொடங்குவோம்" என்று கூறி. தற்போதைய தருணத்தை அர்த்தமுள்ளதாகப் பயன்படுத்த வேண்டும் என்று கற்றுக்கொடுக்கிறார்.

## நேர மேலாண்மை உருவாக்க




1. தினமும் செய்து முடிக்க வேண்டிய செயல்களை நாட்குறிப்பேட்டில் எழுதி வைத்து செய்து முடித்தவற்றை சரி பார்த்துக் கொள்வோம்.
2. செய்து முடிக்காத வேலைகள் இருப்பின் அவற்றை செய்து முடிப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வோம்.
3. தினம்தோறும் நம்மை ஆய்வுக்கு உட்படுத்துவோம். சுய
4. அலைபேசியில் எவ்வளவு நேரம் செலவிடுகிறோம் என்பதை தினந்தோறும் கவனத்தில் கொள்வோம், அலைபேசி நேரத்தை குறைக்க முயற்சிகள் மேற்கொள்வோம்.
5. முதன்மை செயல்களுக்கு அதிக நேரம் ஒதுக்குவோம்.
6. நேர்நிலைச் சிந்தனைகளை உருவாக்கும் புத்தகங்களை வாசிப்போம்.

**மு**டிவாக, நேர மேலாண்மை என்பது கடிகாரத்தை கட்டுப்படுத்துவது அல்ல. அது நம் மனதை கட்டுப்படுத்துவதுதான். தன்னம்பிக்கையுடனும் ஒழுக்கத்துடனும் செயல்படும் இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை வெற்றிகரமாக வடிவமைக்க முடியும்





## புனிதர் பக்கம்

# புனித லாரன்ஸ்



வேதியர் மா. பேபி கமலா
ஒருங்கிணைப்பாளர், அன்பியப் பணிக்குழு

**த**ற்போதைய சுதந்திர நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் நாடு உரோமை பேரரசின்கீழ் செயல்பட்டது. அந்நாட்டின், குயஸ்கா என்ற பகுதியில் இறைபக்தியுள்ள குடும்பத்தில் பிறந்தவர் புனித லாரன்ஸ் அவர்கள். நல்ல விதையிலிருந்து முளைத்தெழும்பும் செடிபோல, கி.பி. 225 ஆம் ஆண்டு இறையாண்மைமிக்க பெற்றோருக்கு பிறந்த லாரன்சும் இயல்பிலேயே ஏழைகள், நோயாளிகள். ஆதரவற்றோர்பால் அக்கறையும் அன்பும் மிகுந்தவர். ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஏக்கத்துடிப்பைத் தன்னகத்தே கொண்டவர்.

**லா**ரன்சின் ஆன்மீகத்தையும், அசைக்கமுடியாத நம்பிக்கையை கவனித்த வண்ணமாய் அவரை, கி.பி. 254 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் சிக்ஸ்துஸ் அவர்கள் உரோமையிலேயே ஏழாவது திருத்தொண்டராகவும், தனது முதன்மை திருத்தொண்டராகவும் அருள்பொழிவு செய்தார். தொடர்ந்து, லாரன்சின் இளமை துடிப்பையும். நேர்கொண்ட பார்வையோடு அநீதிக்குக் குரல் கொடுக்கும் வீரத்தையும் விசுவாசத்தையும் கண்ட திருத்தந்தை, இயேசுவின் திரு இரத்தம், திரு உடல் இறைமக்களுக்கு வழங்கும் அருள்பணியையும். திருஅவையின் செல்வங்களைப் பராமரித்து, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்து ஏழை, எளிய மக்களைக் கண்காணிக்கும் பொறுப்பையும் லாரன்சிடம் ஒப்படைத்தார். லாரன்ஸ், தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை, பிறர் கேள்வி கேட்காமல் வாழ்வின் விளிம்பில் இருப்போர்

வாயார வாழ்த்தும்படியாகவும், அரசர்கள் அளவில்லா ஆச்சர்யப்படும்படியாகவும் தனது இரக்க செயல்களை மக்கள் மனதில் பதிய வைத்தார்.

**இ**ந்தக் காலகட்டத்தில் அரசன் வலேரியன் கிறிஸ்தவத்தை அழிப்பதற்காக, பல நெருக்கடிகளைக் கொண்டு வந்தார். கிறிஸ்தவர்களுக்கெதிராக வன்முறைகளை கோரத்தாண்டவமாடச் செய்தார். தனது வெறிகொண்ட சூழ்ச்சியால் கிறிஸ்தவ தலைவர்களை கொன்றுபோட்டால், கிறிஸ்தவர்கள் ஆயனில்லா ஆடுகளைப்போல அங்கும் இங்கும் சிதறடிக்கப்படுவார்கள் என்ற எண்ணத்துடன், திருத்தந்தை இரண்டாம் சிக்ஸ்துஸ் அவர்களை சிறைபிடித்து கொலைசெய்வதற்காக கொலைக்களத்திற்கு இழுத்துச் சென்றனர். இதைப்பார்த்த லாரன்ஸ் பயம் கலந்த கண்ணீரோடு திருத்தந்தையிடம், **"நீங்க எங்க போனாலும் என்னை அழைத்துச் செல்வீர்களே! இப்போது மட்டும் என்னை ஏன் தனியாக விட்டுவிட்டுச் செல்கிறீர்கள்"** என வினவ, திருத்தந்தையோ, **"பயப்படாதே! துணிவோடிரு! இன்றிலிருந்து மூன்று நாட்களில் நீயும் என்னுடன் வந்து இணைந்து கொள்வாய்"** என்று பதில் கூறினார். காவலர்கள் அவரை கொல்வதற்கு இழுத்துச் சென்றனர். லாரன்சும் மரியன்னையிடம் திருத்தந்தைக்காக மனவேதனையுடன் மன்றாடினார்.

**மீ**ண்டும் லாரன்ஸ் தனது மக்களுக்கான பணியைத் தொடர்ந்தார். இதை கேள்விப்பட்ட பேரரசர் வலேரியன் ஆத்திரமடைந்து, திருஅவையின் சொத்துகளை உடனடியாக தன்னிடம் ஒப்படைக்க லாரன்சிடம் உத்தரவு பிறப்பித்தார். லாரன்ஸ் திருஅவையின் சொத்துகளை விற்று, அதில் வந்த தொகையை வறியவர், வயோதிகர், வாழ்வின் விளிம்பில் இருப்போர்,

மாற்றுத்திறனாளி போன்ற எளியவர்களான ஏழைகளுக்கு மொத்தமாக வழங்கினார். மேலும், அவர்களையே அரசர் முன்பாக நிறுத்தி, துணிவோடு அரசே! இதோ, இவர்களே திருஅவையின் சொத்துகளும், உடைமைகளும் ஆவார் என்றான். உடனே அரசன் வெஞ்சினங்கொண்டு, லாரன்சை கைதுசெய்து சிறைபிடித்துச்செல்ல காவலர்களுக்கு கட்டளையிட்டார். என்னே அச்சரியம்! திருத்தந்தை சிக்ஸ்துஸ் லாரன்சிடம், **"மூன்று நாட்களில் நீயும் என்னுடன் வந்து இணைந்து கொள்வாய்"** என்று கூறிய சொல் இந்நிகழ்வின்மூலம் நிறைவேறியது.

அரசன் தணியாத கோபத்தோடு லாரன்சை சிறையில் சித்திரவதை செய்தார். எனினும், மீளாத வெறியால் காவலர்களிடம், இவனை இரும்பு கட்டிலில் கட்டிப்போட்டு, அதனடியில் தீச்சூளை போல தீ மூட்டச்செய்தான். நெருப்பின் கங்கு சிறிது தெறித்து உடம்பில் பட்டாலே உடனே ஆ! என கத்திக்கொண்டே குழம்புகளைப் பூசுகிறோம். ஆனால், லாரன்சோ, உடல் சூட்டினால் ஏற்படுகிற வலிகளையும் வேதனையின் துடிப்புகளையும் தன்னகத்தே அடக்கி வைத்துக்கொண்டு, சுற்றிநின்ற படைவீரர்களிடம், சிரித்துக்கொண்டே **"எனது உடலின் ஒரு பக்கம் நன்றாக வெந்துவிட்டது. மறுபக்கம் திருப்பிப் போடுங்கள்"** என்று நகைச்சுவையாகக் கூறினாராம். அரசனும் அதிகாரிகளும் மிரண்டுபோயினர். துன்பத்தில் துடிப்பார் என எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இவ்வாறு இறுதிவரை வீரத்துடனும் விசுவாசத்துடனும் கடவுளின் மகிமையை உலகுக்கு பறைசாற்றிவிட்டு. மறைசாட்சியாக உயிரிழந்தார்.

இவர் கொல்லப்பட்ட நாள் கி.பி. 258, ஆகஸ்டு 10. லாரன்சை புனிதராக உயர்த்திய கத்தோலிக்க திருஅவையானது இந்த நாளை

திருத்தொண்டர் மறைசாட்சி விழாவாகக் கொண்டாடுகிறது. இவர் சமையல்காரர்கள் மற்றும் தீயணைப்பு வீரர்களின் பாதுகாவலராக திகழ்கிறார். இயேசுவைப்போலவே 33 வருடங்கள் மண்ணில் வாழ்ந்து, துடிப்புடனும் உதவேகத்துடனும் ஏழைகளுக்காகவே எல்லாவித துன்பத்தையும் இன்பமாக ஏற்றுக்கொண்டார், மக்கள் மனதில் நீங்காத இடம்பிடித்த புனித லாரன்ஸ், தொடக்க காலத்தில் மிக பிரபலமான புனிதருள் ஒருவராகக் காணப்பட்டார். இப்புனிதருக்காக பல ஆலயங்கள் உரோமையில் கட்டப்பட்டிருந்தாலும், சான் லோரென்சோ இன் டமாசோ (San Lorenzo in Damaso) என்பது உரோமின் வரலாற்று சிறப்பு மிகுந்த வழிபாட்டுத்தலமாகிய கத்தோலிக்க பசிலிக்கா ஆகும்.

**சிந்தனை :**

1. லாரன்ஸ் இளம் வயதிலே திருத்தந்தைக்கு துணையாய் இருந்ததுபோல் நாமும் ஆன்மீக வழிகாட்டிகளுக்கு துணைநிற்போம். அவர்வழியை பின்பற்றுவோம்.
2. கண்ணால் காணுகின்ற ஏழைகளுக்கு நம்மால் இயன்ற பொருளுதவி அல்லது உடலுதவியாவது செய்வோம்.


**மறைமாவட்ட**
**இயக்குநர்,**
**ஒருங்கிணையப்பாளர்,**
**களப்பணியாளர்கள்**



3-ம் வாரம்

# சிறார் பக்கம்

## குறிக்கோளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்



திருமதி. E. பிளாரன்ஸ் ஜெயா
சிறார், களப்பணியாளர்.

**"முயன்று பார்த்தால் ஒருவேளை நீ வானத்தில் கூட பறக்க முடியும்"** என்று ஆங்கிலத்தில் ஒரு வசனம் உண்டு அது வெறும் பேச்சு அல்ல.



**"உன் குறிக்கோளை உயரத்தில் வை, அதை அடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்"** என்று சுட்டிக் காட்டியதுதான் அந்த ஆங்கில வசனம் பேச்சு வழக்கில் வந்தது.

**மா**ணவ செல்வங்களே. குறித்து வைத்துக் கொள்ளுங்கள் உங்கள் குறிக்கோள் அது ஒன்றாக இருக்கலாம் ஒன்றுக்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம் குறிக்கோள் என்ற இலக்கு இல்லாமல் நீங்கள் எப்படி பயணம் செய்து உங்கள் இலக்கை அடைவீர்கள்?

**எ**னவே குறிக்கோள் என்ன என்பதில் தெளிவாக இருங்கள். தீர்மானமாக இருங்கள். அதை அடைவதற்கான பாதையை தேர்ந்தெடுங்கள் முயற்சிகளை மேற்கொள்ள ஆரம்பியுங்கள் எப்படி செயல்பட்டால் குறிக்கோளை அடைய முடியும் என்னும் சாத்தியக்கூறுகள் பற்றி சதா நினையுங்கள்; ஏன் பகல் கனவு கூட காணலாம் நீங்கள் இந்த கனவுகள் உங்களைத் தூண்டிக்கொண்டே இருக்கும்.

**க**னவுகள் வெறும் கற்பனைக் கோட்டைகள் அல்ல. அவற்றுக்கு ஆழமான அடித்தளம் உண்டு. நீங்கள் அதன்மேல்

எழுப்பப்போகும் கட்டிடங்கள்.உங்கள் கற்பனைகள் அல்ல; உங்கள் ஆசைகள், உங்கள் விருப்பங்கள்.

**அ**வற்றுக்கு இப்போது வேண்டுமென்றால் உருவமோ, உயிரோ இல்லாதிருக்கலாம். ஆனால், உங்கள் கனவுகள் செயல் வடிவம் பெறும்போது அவற்றுக்கு திடமான உருவம் உண்டாகும். உயிர் துடிப்பு அதிலிருந்து வெளிப்படும்.

**கு**றிக்கோள் இல்லாத எந்த மனிதனும் சாதனைகளை வென்று சரித்திரம் படைத்ததில்லை. உங்களை இந்த நாளிலும் திருஅவையும் பல எதிர்ப்பார்ப்புகளோடு காத்திருக்கின்றது. உங்கள் குறிக்கோளின் பயணங்கள் இப்போதே தொடருங்கள்.

## பாரம்பரிய கலைகள்

# சடுகுடு



**திரு, K. ஆல்பின் ஜோஸ்,**
களப்பணியாளர்.

**ப**ழங்காலத்தில் மக்கள் உடல்நலம், மனமகிழ்ச்சி, குழு ஒற்றுமைக்காக விளையாடிய பாரம்பரிய விளையாட்டு சடுகுடு சடுகுடு விளையாட்டு இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. சங்க கால இலக்கியங்களிலும் தமிழர்களின் வீர விளையாட்டாக சடுகுடு குறிப்பிடப்பட்டுள்ளது. பழமையான காலங்களில் இது வீரர்களின் உடல் வலிமையும், போர் திறனையும் வளர்க்க பயன்படுத்தப்பட்டது.

**பி**ன்னர் காலப்போக்கில் இது ஒழுங்குபடுத்தப்பட்ட விளையாட்டாக வளர்ச்சி பெற்று தேசிய மற்றும் சர்வதேச வளர்ச்சி பெற்று தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளாக மாறியது. இன்றைய காலத்தில் ஆசிய விளையாட்டுகள் மற்றும் தொழில் முறை விளையாட்டுகளிலும் சடுகுடு முக்கிய இடம் பெற்றுள்ளது

**சடுகுடு விளையாட்டு விளையாடும் முறை:**

- இரண்டு அணிகளுக்கு இடையே நடைபெறும்.
- ஒவ்வொரு அணியிலும் பொதுவாக ஏழு வீரர்கள் இருப்பார்கள்.
- மைதானம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்படும்.

**சடுகுடு விளையாட்டின் விதிகள்**

1. ஓர் அணியில் இருந்து ஒரு வீரர் எதிரணி பகுதிக்குள் செல்வர்.
2. சடுகுடு என்று இடைவிடாது சொல்லிக்கொண்டே எதிரணி வீரரை தொட வேண்டும்.
3. தொடப்பட்டவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றி விட்டு தன் பகுதிகள் திரும்ப வேண்டும்.
4. எதிரணி வீரர்கள் ரைடரை பிடித்து தடுக்க முயல்பவர்கள்.
5. எல்லை கோட்டை மீறினால் வெளியேற்றப்படுவார்.
6. பிடிபட்டு தப்பிக்க முடியாவிட்டால் வெளியேற்றப்படுவார்.
7. ஒரு வீரரை தொடுவதால் ஒரு புள்ளி கிடைக்கும்.
8. முழு அணியையும் வெளியேற்றினால் கூடுதல் புள்ளி கிடைக்கும்.
9. குறிப்பிட்ட நேரத்தில் அதிக புள்ளி பெறும் அணி வெற்றி பெறும்.

**சடுகுடு விளையாட்டால் வரும் நன்மைகள் (சிறப்பு)**

- எந்த உபகரணமும் தேவையில்லை.
- குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விளையாடலாம்.
- உடலையும் மனதையும் சமமாக வளர்க்கும்.
- சமூக உறவை வலுப்படுத்தும்.

சடுகுடு என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல; உடல், மனம் மற்றும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் பாரம்பரிய கலை. இன்றைய இளைஞர்கள் சடுகுடு போன்ற நாட்டுப்புற விளையாட்டுகளை விளையாடுவதன் மூலம் ஆரோக்கியமும் பண்பாடும் பாதுகாக்கப்படுகிறது.

# அசிசி நகர் புனித பிரான்ஸிசின்
# அமைதிக்கான மன்றாட்டு



இறைவா! அமைதியின் தூதுவர்களாய்
எங்களைப் பயன்படுத்தும்
பகையுள்ள இடத்தில் பாசத்தையும்
மனவேதனையுள்ள இடத்தில் மன்னிப்பையும்
ஐயமுள்ள சூழலில் விசுவாசத்தையும்
அவநம்பிக்கையுள்ள மனத்தில் நம்பிக்கையையும்
இருள் சூழ்ந்த இடத்தில் ஒளியையும்
துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழ்ச்சியையும்
வழங்கிட எங்களுக்கு அருள்புரியும்.
ஓ! தெய்வீக குருவே!!
ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும்,
பிறர் எங்களைப் புரிந்துகொள்ள விரும்புவதைவிட
பிறரைப் புரிந்து கொள்ளவும்,
பிறருடைய அன்பை அடைய ஆசிப்பதைவிடப்
பிறருக்கு அன்பை அளிக்கவும்
எங்களுக்கு அருள்வீராக... ஏனெனில்,
கொடுக்கும்பொழுது மிகுதியாகப் பெறுகிறோம்;
மன்னிக்கும்பொழுது மன்னிப்பை அடைகிறோம்.
இறக்கும்பொழுது நிலைவாழ்விற்குப் பிறக்கிறோம்.
எனவே, சுயநலமற்ற வாழ்வில்
அமைதியை அடைகிறோம்.
ஆ ஆமென்.

# மறைவட்ட நலத்திட்டங்கள்

## முளகுமூடு

| பங்கு | அன்பியம் | நோக்கம் | நபர் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| குழிவிளை | தூய அன்னை தெரசா | ஏழைகள் உதவி | 1 | 5,500/- |
| | தூய ஞானப்பிரகாசியார் | மருத்துவ உதவி | 9 | 17,500/- |
| | தூய செபஸ்தியார் + தூய யோசேப்பு | மருத்துவ உதவி | 1 | 66,000/- |
| மணலிக்கரை | புனித அந்தோணியார் | மருத்துவ உதவி | 1 | 4,100/- |
| | அன்னை | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| | புனித ஜார்ஜியார் | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| | ஒருங்கிணையம் | தொலையாவட்டம் காப்பகம் | | 2,500/- |
| | புனித சவேரியார் | காரோடு காப்பகம் | | 10,000/- |
| குமாரபுரம் | தூய ஆரோக்கிய அன்னை | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | அன்னை தெரசா | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | புனித அந்தோணியார் | மாற்று திறனாளி | 1 | 1,000/- |
| கல்லறவிளை | ஒருங்கிணையம் | கல்வி உதவி | 5 | 5,000/- |
| | | ஏழைகள் உதவி | 1 | 9,300/- |
| | | மருத்துவ உதவி | 1 | 7,200/- |
| கூட்டமாவு | தூய அந்தோணியார் | ஏழைகள் உதவி | 1 | 2,000/- |
| ஈத்தவிளை | ஒருங்கிணையம் | கோழிக்கோட்டு பொத்தை காப்பகம் | | 10,000/- |

| பங்கு | அன்பியம் | நோக்கம் | நபர் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| சாய்க்கோடு | தாய அல்போன்சா | ஏழைகள் உதவி | 1 | 500/- |
| முளகுமூடு | அவிலா தெரசா | ஏழைகள் உதவி | 1 | 13,500/- |
| விலவூர் | புனித சவேரியார் | மருத்துவ உதவி | 1 | 500/- |

# திரித்துவபுரம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | நபர் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| மருதங்கோடு | புனித தேவசகாயம் | ஏழைகள் உதவி | 4 | 2,500/- |
| | புனித பவுல் | ஏழைகள் உதவி | 4 | 2,300/- |
| | புனித லூர்து அன்னை | ஏழைகள் உதவி | 3 | 4,000/- |
| மேல்புறம் | ஒருங்கிணையம் | திருமண உதவி | 1 | 41,150/- |
| | புனித யூதா ததேயு | ஏழைகள் உதவி | 2 | 1,750/- |
| மலமாரி | 3 | மருத்துவ உதவி | 1 | 500/- |
| | ஒருங்கிணையம் | திருமண உதவி | 1 | 10,000/- |
| பாகோடு | புனித அருளானந்தர் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித பவுல் | ஏழைகள் உதவி | 1 | 2,000/- |
| | ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 40,000/- |
| சிராயன்குழி | 3 | மருத்துவ உதவி | 1 | 2,500/- |
| கல்லுப்பாலம் | தூய ஆரோக்கிய அன்னை | மருத்துவ உதவி | 2 | 2,500/- |
| | | ஏழைகள் உதவி | 5 | 6,000/- |

| | | | | |
|---|---|---|---|---|
| பாத்திமாபுரம் | ஒருங்கிணையம் | திருமண உதவி | 2 | 15,370/- |
| சூழால் | 1 | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| வெட்டுவெந்நி | புனித தேவசாகயம் | ஏழைகள் உதவி | 1 | 1,100/- |
| | புனித அகுந்தினார் | ஏழைகள் உதவி | 2 | 2,100/- |
| | புனித கிறிஸ்து அரசர் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | | கல்வி உதவி | 1 | 1,000/- |
| | ஒருங்கிணையம் | கருணை இல்லம் | 1 | 10,000/- |
| பரக்குன்று | ஒருங்கிணையம் | ஏழைகள் உதவி | 14 | 18,000/- |
| திரித்துவபுரம் | கிறிஸ்து அரசர் | கல்வி உதவி | 3 | 5,000/- |
| | | ஏழைகள் உதவி | 4 | 2,000/- |
| | சகாய மாதா | ஏழைகள் உதவி | 2 | 3,000/- |
| லூர்துகிரி | ஒருங்கிணையம் | ஏழைகள் உதவி | 25 | 1,02,320/- |
| செம்மங்காலை | புனித அந்தோணியார் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | சகாய மாதா | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| செறுவல்லூர் | புனித தேவசாகயம் | ஏழைகள் உதவி | 1 | 1,000/- |
| | குழந்தை ஏசுவின் தெரசாள் | ஏழைகள் உதவி | 1 | 600/- |
| | பவுல் | ஏழைகள் உதவி | 18 | 810/- |
| | | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| இருதயபுரம் | ஒருங்கிணையம் | வீடு கட்டிக் கொடுத்தது | 1 | 11,00,000/- |
| | | ஏழைகள் உதவி | 14 | 4,000/- |
| நல்லாயன்புரம் | ஆரோக்கிய அன்னை | காப்பகம் | 1 | 4,500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| நல்லாயன்புரம் | ஜாண் போஸ்கோ | ஏழைகள் உதவி | 1 | 980/- |
| | சூசையப்பர் | ஏழைகள் உதவி | 30 | 780/- |
| பாலவிளை | 1 | ஏழைகள் உதவி | 2 | 2,000/- |
| | 2 | ஏழைக்கு வைப்பு நிதி | 1 | 30,000/- |
| | 3 | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| | 4 | ஏழைகள் உதவி | 3 | 2,500/- |
| | 5 | ஏழைகள் உதவி | 1 | 2,500/- |
| | 6 | ஏழைகள் உதவி | 2 | 4,000/- |
| | 7 | ஏழைகள் உதவி | 6 | 2,700/- |
| | 8 | மருத்துவ உதவி | 1 | 46,000/- |
| | 9 | மருத்துவ உதவி | 1 | 22,000/- |
| | 10 | ஏழைகள் உதவி | 2 | 7,500/- |
| காஞ்சிரகோடு | லூர்து மாதா | ஏழைகள் உதவி | 8 | 4,000/- |
| | பாத்திமா மாதா | ஏழைகள் உதவி | 6 | 4,800/- |
| | வியாகுல மாதா | ஏழைகள் உதவி | 1 | 5,000/- |
| | காணிக்கை மாதா | ஏழைகள் உதவி | 5 | 2,500/- |
| | கார்மல் மாதா | ஏழைகள் உதவி | 11 | 11,000/- |
| | ஆரோபண மாதா | ஏழைகள் உதவி | 5 | 2,500/- |
| | பனிமய மாதா | ஏழைகள் உதவி | 1 | 1,100/- |
| ரூ. | ஒருங்கிணையம் | முதியோர் இல்லம் | 1 | 12,000/- |
| | | திருமண உதவி | 1 | 15,000/- |

| | | | |
|---|---|---|---|
| ஆக மொத்தம் | | | |
| | **1. முளகுமூடு மறைவட்டம்** | | |
| | | மருத்துவ உதவி | 98,800./- |
| | | ஏழைகள் நல உதவி | 38,800./- |
| | | கல்வி உதவி | 5,000/- |
| | | காப்பகம் சந்தித்து உதவி | 22,500/- |
| | 2. **திரித்துவபுரம் மறைவட்டம்** | | |
| | | மருத்துவ உதவி | 1,27,500/- |
| | | ஏழைகள் நல உதவி | 2,38, 340/- |
| | | கல்வி உதவி | 6,000/- |
| | | காப்பகம் சந்தித்து உதவி | 26,500/- |
| | | திருமண உதவி | 81,250/- |
| | | வீடு கட்டி கொடுத்தது | 11,00,000/- |
| | | | |
| | | **மொத்தம்** | **11, 44, 960/-** |

# அன்பிய இறைமக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

14-02-2026 அன்று நடைபெற்ற நமது மறைமாவட்ட அன்பிய கருத்தரங்கின் கருத்துரை வீடியோக்கள் அன்பிய You tube வலைதளத்தில் உள்ளன. அவற்றை அன்பிய மக்கள் அனைவரும் இணைந்து, கேட்டு ஒரு தலைப்பிற்கு ஒன்றரை பக்க அளவு வீதம் மூன்று தலைப்பும் சேர்த்து மொத்தம் ஐந்து பக்க அளவிற்கு சொல்வளத்திடனும், கருத்துச் செறிவுடனும் கட்டுரை வடிவிலே வடிவமைத்து, அதை மார்ச் 31, 2026க்குள் மறைமாவட்ட அன்பிய பணிக்குழு அலுவலகம், உண்ணாமலைக்கடையில் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அதேநேரம் கட்டுரைப் போட்டியில் பங்கேற்கும் அன்பியம் மூன்று கட்டுரையும் எழுதியிருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்

அன்பிய இயக்குநர்
அன்பியப் பணிக்குழு, டிரினிட்டி
மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை 629 179
அலுவலக தொடர்பு எண் :
9487110298, 7358947467

# திருச்சபை சட்டம் கேள்வியும், பதிலும்

## திருமண சம்மதம் உண்ணமயானதா? போலியானதா? என்பதை எவ்வாறு கண்டுகொள்வது?



அருள்முனைவர் ஆரோக்கிய ஜோஸ் DCL

நீதித்துறை ஆயர் பதில் குரு, பங்குபணியாளர், திக்குறிச்சி

திருமண சம்மதம் என்பது திருமணத்தின் மிக முக்கியமான அம்சமாகும். அந்த சம்மதமே சில நேரங்களில் உண்மைக்கு புறம்பான அல்லது போலியான ஒன்றாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் இந்த காலக்கட்டத்தில் அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பது நிதர்சனமான ஒன்று. திருமணம் போலியான சம்மதத்தினால் நிறைவேற்றப்பட்டிருப்பின் அது செல்லாநிலை திருமணம் என்று ஒரு கத்தோலிக்கத் திருஅவை சட்டம் கூறுகிறது. திருமண சம்மதத்தைப் பாதிக்கக்கூடிய முக்கியமான காரணிகள் எவை என்பதைப் பற்றி விரிவாக எடுத்துக்கூறுகின்றது. கீழ்க்கண்டவர்கள் திருமண ஒப்பந்தம் செய்வதற்குத் தகுதி அற்றவர்கள் ஆவர்.

1. போதுமான அளவு பகுத்தறிவுப் பயன்பாடு அற்றவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1095, பிரிவு 1)
2. கணவன் மனைவி இருவராலும் பரஸ்பரமாக வழங்கப்பட்டு ஏற்றுக்கொள்ள வேண்டிய திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளையும் உரிமைகளையும் பற்றிச் சீர்தூக்கிப்பார்க்கும் திறனாய்வு பண்பு மிகக் குறைவாக இருப்பதால் பாதிக்கப் பட்டவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1095, பிரிவு 2).
3. உளவியல் (மனநலம்) கோளாறுகளால் திருமணத்தின் இன்றியமையாத கடமைகளை நிறைவேற்றும் ஆற்றல் அற்றவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1095, பிரிவு 3)

4. திருமணம் என்பது ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையேயுள்ள நிரந்தர ஓர் உறவு சமூகம் என்பதையும், அது பாலியல்பு சார்ந்த ஓரளவு ஒத்துழைப்பால் மகப்பேற்றுக்காக அமைந்துள்ளது என்பதையும் அறியாதவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1096).
5. தான் திருமணம் செய்யப்போகும் ஆள் யார் என்பது பற்றிய தவறான கணிப்பை வைத்திருப்பவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1097. 1)
6. தான் திருமணம் செய்யப்போகும் நபரிடத்தில், தான் நேரடியாகவும் முதன்மையாகவும் எதிர்பார்க்கும் குணம் பற்றிய தவறான கணிப்பை கொண்டவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1097. பிரிவு 2)
7. திருமண வாழ்வில் ஒரு பெரிய அளவிலான நெருக்கடியைத் ஏற்படுத்தி. திருமண வாழ்வையே சீர்குலைக்கக்கூடிய மிகக் கனமான காரியத்தை அல்லது காரியங்களை மறைக்கும் வஞ்சகச் சூழ்ச்சி உடையவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1098).
8. திருமணத்தின் ஒருமைப் பண்பு அல்லது அதன் முறிவுபடாத்தன்மை அல்லது அதன் அருளடையாள மாண்பு ஆகியவற்றைப் பற்றிய உளரீதியான தவறான எண்ணம் கொண்டவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1099).
9. மனதளவில் திருமணம் வேண்டாம் என்று ஒதுங்கிவிட்டு, உதட்டளவில் திருமணம் செய்ய சம்மதம் தெரிவிக்கும் முழுப்பாசாங்கு செய்பவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1101).
10. திருமணம் செய்ய விரும்பினாலும், திருமணத்தின் இன்றியமையாதக் கூறுகளான ஒருமைத்தன்மை,

முறிவுப்படாதத்-தன்மை, குழந்தைப்பேறு ஆகியவற்றைப் புறந்தள்ளிவிடும்படியாக பகுதிப்பாசாங்கு செய்பவர்கள் (திருஅவைச் சட்ட எண் 110).

11. திருமண சம்மதத்தோடு இணைக்கப்பட்ட எதிர்கால நிபந்தனைகள் விதிப்பவர்கள் (திருஅவைச் சட்ட எண் 1102).

12. வெளியிலிருந்து திணிக்கப்பட்ட வலுவந்தத்தாலோ, பயத்தாலோ, அது வேண்டுமென்றே திணிக்கப்படவில்லை எனினும், அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு, திருமணத்தைத் தெரிவுசெய்ய ஒருவர் முடிவுசெய்து செய்த திருமணம். மேற்கண்ட பாதிப்புடன் ஒருவர் தெரிவிக்கின்ற சம்மதம் உண்மையான முழுமையான சம்மதமாக இருக்காது. எனவே, இந்த நிலையில் செய்யப்படுகின்ற எந்த திருமணமாக இருந்தாலும் அது போலியான அல்லது செல்லாநிலை திருமணமாகும். எனவே, இதைப்பற்றிய முழுமையான அறிவை திருமணத்திற்கு முன் பயிற்சிக்குச் செல்கின்றவர்களிடம் தெளிவாக எடுத்துக்கூறி எதிர்கால திருமண விபத்தை தடுக்க திருஅவையின் பொறுப்பாளர்கள், அருள்தந்தையர்கள், திருமணப் பயிற்சி அளிப்பவர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் அனுபவமிக்க தம்பதியர்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும்.

# தவக்காலத்தில் நான்



திரு. S. ஜாண் பெல்லார்மின்
களப்பணியாளர்.

| | | |
|---|---|---|
| **நாள் 21** | : | மரியாதை |
| சிந்தனை | : | சுயமரியாதை வாழ்வை உயர்த்தும் |
| செபம் | : | நல்ல பழக்கங்களை வளர்க்க உதவி செய்யும் இறைவா |
| **நாள் 22** | : | புதிய நாள் |
| சிந்தனை | : | ஒவ்வொரு நாளும் புதிய வாய்ப்பு |
| செபம் | : | இன்று புதிதாக தொடங்க உதவும் வரம் தா இறைவா |
| **நாள் 23** | : | பொறுமை |
| சிந்தனை | : | பிறரின் குறைகளை மன்னிப்பேன் |
| செபம் | : | பொறுமையுள்ள மன்னிக்கும் மனம் தா இறைவா |
| **நாள் 24** | : | பணிவு |
| சிந்தனை | : | பணிவு உயர்வின் பாதை |
| செபம் | : | நான் என்ற அகந்தையை நீக்க துணையாக வாரும் இறைவா |

| | | |
|---|---|---|
| **நாள் 25** | : | உதவி |
| சிந்தனை | : | உதவி கேட்பதும் வலிமை |
| செபம் | : | தேவையானபோது உதவி பெறவும், உதவி செய்யவும் என்னை தயார் செய் இறைவா |
| **நாள் 26** | : | சாட்சி |
| சிந்தனை | : | என் வாழ்க்கை ஒரு சாட்சி |
| செபம் | : | நல்ல முன்மாதிரி வாழ்வு வாழ வரம் தா இறைவா |
| **நாள் 27** | : | உண்மை |
| சிந்தனை | : | உண்மை விடுதலை தரும் |
| செபம் | : | உண்மையில் நிலைத்திருக்க உதவி புரியும் இறைவா |
| **நாள் 28** | : | தியாகம் (சிலுவை) |
| சிந்தனை | : | சிலுவை அன்பின் உச்சம் |
| செபம் | : | தியாகத்தின் அர்த்தம் புரியச் வழிகாட்டு இறைவா |
| **நாள் 29** | : | நேரம் |
| சிந்தனை | : | நேரம் இறைவனின் பரிசு |
| செபம் | : | நேரத்தை நல்லவைகளுக்கு பயன்படுத்த உதவி செய்யும் இறைவா |

| | | |
|---|---|---|
| **நாள் 30** | : | சேவை |
| சிந்தனை | : | சேவையில் மகிழ்ச்சி உள்ளது |
| செபம் | : | சேவையுள்ளம் கொண்ட மனம் தா இறைவா |
| **நாள் 31** | : | செப நம்பிக்கை |
| சிந்தனை | : | செபம் கவலையை நீக்கும் |
| செபம் | : | எல்லாவற்றையும் உமக்கு ஒப்படைக்கிறேன் இறைவா |
| **நாள் 32** | : | மகிழ்ச்சி |
| சிந்தனை | : | பிறரின் மகிழ்ச்சியில் மகிழ்வேன் |
| செபம் | : | பொறாமையை அகற்றும் வரம் தா இறைவா |
| **நாள் 33** | : | மனச்சாட்சி |
| சிந்தனை | : | மனச்சாட்சியின் குரல் வழிகாட்டி |
| செபம் | : | சரியானதைத் தேர்வு செய்ய உதவும் இறைவா |
| **நாள் 34** | : | மன மாற்றம் |
| சிந்தனை | : | தவக்காலம் மன மாற்றத்தின் பயணம் |
| செபம் | : | நல்ல மன மாற்றம் தாரும் இறைவா |

| | | |
|---|---|---|
| **நாள் 35** | : | வளர்ச்சி |
| சிந்தனை | : | தினமும் சிறிது முன்னேறுவேன் |
| செபம் | : | ஆன்மிக வளர்ச்சியடைய வரம் தா இறைவா |
| **நாள் 36** | : | நம்பிக்கை |
| சிந்தனை | : | இறைவன் என்னோடு இருக்கிறார் |
| செபம் | : | பயத்தை அகற்றி உம்மோடு பயணிக்க வரம் தா இறைவா |
| **நாள் 37** | : | பாதுகாப்பு |
| சிந்தனை | : | என் வாழ்வு உம் கைகளில் |
| செபம் | : | நான் உம் பாதுகாப்பில் வாழ வரம் தா இறைவா |
| **நாள் 38** | : | சிலுவை |
| சிந்தனை | : | சிலுவை துன்பத்தில் நம்பிக்கை |
| செபம் | : | துன்பத்தை ஏற்க மன வலிமை தா இறைவா |
| **நாள் 39** | : | உயிர்த்தெழுதல் |
| சிந்தனை | : | உயிர்த்தெழுதல் வெற்றியின் அடையாளம் |
| செபம் | : | நான் உம்மில் உயிர் வாழ உதவி புரியும் இறைவா |
| **நாள் 40** | : | புதிய வாழ்வு |
| சிந்தனை | : | மாற்றம் தொடர்ந்து நடக்க வேண்டும் |
| செபம் | : | புதிய வாழ்வை வாழ அருள் தா இறைவா ஆமென் |

# ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | மார் 02, 2026 | தொ.நூ. 12:1-4 | 2 திமொ 1: 8-10 | மத். 17: 1 -9 |
| 2 | மார் 08, 2026 | வி. ப. 17: 3-7 | உரோ 5:1-2, 5-8 | யோவா. 4: 5-42 |
| 3 | மார் 15, 2026 | 1 சாமு. 16:1, 6-7, 10-13 | எபே. 5:8-14 | யோவா. 9:1-41 |
| 4 | மார் 22, 2026 | எசே. 37:12-14 | உரோ. 8:8-11 | யோவா. 11:1-45 |
| 5 | மார் 29, 2026 | எசா. 50:4-7 | பிலி. 2:6-11 | மத். 26:14-27; 66 |

**அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. ..**
**தொடர்புக்கு...9487110298, 8870513177**

**அன்பிய இயக்குநர்**
**அன்பிய பணிக்குழு**
**டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,**
**உண்ணாமலைக்கடை 629 179**




அன்பியப் பணிக்குழு
குழித்துறை மறை மாவட்டம்
நடத்தும்
கருத்தரங்கு
நிறைவாழ்வை
நோக்கி
அன்பிய பயணம்
நாள் : 14.02.2026
இடம் : புனித சவேரியார் கத்தோலிக்க பொறியியல் கல்லூரி,
சுங்கான்கடை.
விழாவிற்கு வருகை தரும்
சிறப்பு விருந்தினர்கள் அனைவரையும்
அன்புடன் வரவேற்கிறோம்..


குழித்துறை மறைமாவட்டம்
அன்பிய கருத்தரங்கு






குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப் பணிக்குழு
அன்பிய கருத்தரங்கு


அன்பிய கருத்தரங்கு
நிறைவாழ்வை நோக்கி அன்பிய பயணம்




14-02-2026


குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப்பணிக்குழு


குழித்துறை மறைமாவட்டம்


குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப்பணிக்குழு
அன்பிய கருத்தரங்கு


குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப்பணிக்குழு
அன்பிய கருத்தரங்கு
இறைவாழ்வைநோக்கி அன்பிய பயணம்
14-02-2026


குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப்பணிக்குழு
அன்பிய கருத்தரங்கு




குழித்துறை மறைமாவட்டம்
அன்பியப்பணிக்குழு
அன்பிய கருத்தரங்கு

# மறைவட்ட
# நிர்வாகிகள் கூட்டம்



முளகுமூடு



மாத்திரவிளை



வேங்கோடு

# மறைவட்ட
# செயற்குழு கூட்டங்கள்



மாத்திரவிளை



புத்தன்கடை




திரித்துவபுரம்



முளகுமூடு



வேங்கோடு

# மறைவட்ட பொதுக்குழுக்கள்

## காரங்காடு மறைவட்ட பொதுக்குழுவில் காய்கறி கண்காட்சி







## முளகுமூடு





# மறைவட்ட பொதுக்குழுக்கள்

## மாத்திரவிளை மறைவட்ட பொதுக்குழுவில் மனமகிழ் விளையாட்டு








# மறைவட்ட
# பொதுக்குழுக்கள்



வேங்கோடு

திரித்துவபுரம்



## புத்தன்கடை மறைவட்ட
## பொதுக்குழுவினர் காப்பகம் சந்தித்தல்









# மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் பங்களவில் பயிற்சி

## திரித்துவபுரம் மறைவட்டம்

## ஒருங்கிணையம் : கல்லுப்பாலம்

நாள் : 08.02.2026
சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திருமதி. T. ஷீலா
பங்கேற்பு: 15 நபர்கள்.



## ஒருங்கிணையம் : காஞ்சிரகோடு



நாள் : 08.02.2026
சிந்தனை: பங்கேற்பு, சவால்கள், பணிப்பகிர்வு
கருத்தாளர்: திருமதி. T. ஷீலா
பங்கேற்பு: 70 நபர்கள்.





# பங்களவில் புதிய நிர்வாகிகள்



தக்கலை



திக்குறிச்சி



குழிவிளை

# பொன்மலை தியானம்

## முளகுமூடு மறைவட்டம்





# பொன்மலை தியானம்

## திரித்துவபுரம் மறைவட்டம்







# பங்களவில் சங்கம விழா

## காரங்காடு மறைவட்டம்

## சுங்கான்கடை






## திரித்துவபுரம் மறைவட்டம்

## அமலாபுரம்













# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்





சுங்கான்கடை



கல்லுக்கூட்டம்



கண்டன்விளை



கொன்னக்குழிவிளை

## களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்





திக்குறிச்சி

# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்





செறுகோல்



கல்லங்குழி



மூலச்சல்



தக்கலை



மருதூர்குறிச்சி



முகமாத்தூர்



செட்டிச்சார்விளை

# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்





பள்ளியாடி



சேரிக்கடை



கருங்கல்

சகாயநகர்



மாத்திரவிளை





# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்



அரமன்னம்



ஏற்றக்கோடு



# களப்பணியாளர் சந்தித்த ஒருங்கிணையங்கள்

உடவிளை





காப்புக்காடு

குழிவிளை





செபஸ்தியார்புரம்



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்



காப்புக்காடு அன்பியம் 8



காப்புக்காடு அன்பியம் 1



காப்புக்காடு அன்பியம் 10



கரும்பிலாவிளை அன்பியம் 1



கரும்பிலாவிளை அன்பியம் 2



கரும்பிலாவிளை அன்பியம் 3



கரும்பிலாவிளை அன்பியம் 4



முஞ்சிறை அன்பியம் 1



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்



முஞ்சிறை அன்பியம் 12



முஞ்சிறை அன்பியம் 13



முஞ்சிறை அன்பியம் 15



முஞ்சிறை அன்பியம் 8



வாவறை அன்பியம் 2



விளாத்துறை அன்பியம் 1



விளாத்துறை அன்பியம் 3



வேப்புவிளை அன்பியம் 4



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்

வேங்கோடு
அன்பியம் 12





வேங்கோடு
அன்பியம் 10

விழுந்தையம்பலம்
அன்பியம் 3





விழுந்தையம்பலம்
அன்பியம் 8

விழுந்தையம்பலம்
அன்பியம் 7



# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





செட்டிச்சார்விளை
அன்பியம் 11



இளம்பிலாவிளை
அன்பியம் 1



இளம்பிலாவிளை
அன்பியம் 4



தக்கலை, புனித குழந்தை
தெரசாள் அன்பியம்



மணலிக்கரை
அன்பியம் 4



மணலிக்கரை
அன்பியம் 5 (ஆண்டு விழா)



மணலிக்கரை
அன்பியம் 19



மணலிக்கரை
அன்பியம் 21

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





கண்ணன்விளை அன்பியம் - 1



கம்பிளார் அன்பியம் -5



கம்பிளார் அன்பியம் - 1



கம்பிளார் அன்பியம் - 2



கண்ணன்விளை அன்பியம் - 2



கம்பிளார் அன்பியம் -7



கம்பிளார் அன்பியம் -7



சேரிக்கடை அன்பியம் -3

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





சேரிக்கடை அன்பியம் - 7



சேரிக்கடை அன்பியம் - 8



திக்கணங்கோடு அன்பியம் - 1



திக்கணங்கோடு அன்பியம் - 2



திக்கணங்கோடு அன்பியம் - 3



திக்கணங்கோடு அன்பியம் - 4



துண்டத்துவிளை அன்பியம் - 7

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





பள்ளியாடி
அன்பியம் - 18



துண்டத்துவிளை
அன்பியம் - 15



தொலையாவட்டம்
அன்பியம் - 2



பள்ளியாடி
அன்பியம் - 16



தொலையாவட்டம்
அன்பியம் - 2



பள்ளியாடி
அன்பியம் - 13

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்






ஆற்றூர் அன்பியம் - 5



அம்பலக்கடை அன்பியம் - 3



அம்பலக்கடை
அன்பியம் - 2



அம்பலக்கடை
அன்பியம் - 2



குலசேகரம்
அன்பியம் - 1

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





ஏற்றக்கோடு அன்பியம்



ஏற்றக்கோடு அன்பியம் - 3




தெற்றிக்கோடு அன்பியம் - 3



ஏற்றக்கோடு அன்பியம் - 2

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





அமலாபுரம்
அன்பியம் 5

சிராயன்குழி
அன்பியம் 5





சிராயன்குழி
அன்பியம் 6

நெல்லிக்காவிளை
அன்பியம் 1





சிராயன்குழி
அன்பியம் 1

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





குழித்துறை
அன்பியம் 7



நெல்லிக்காவிளை
அன்பியம் 2



சூசைபுரம்
அன்பியம் 5



சூசைபுரம்
அன்பியம் 9



களியக்காவிளை
அன்பியம் 10

# களப்பணியாளர் சந்தித்த அன்பியங்கள்





பிள்ளவிளை
அன்பியம் 1



காரங்காடு
அன்பியம் 9



கண்டன்விளை
அன்பியம் 3





திருவிதாங்கோடு
அன்பியம் 6



பிள்ளவிளை
அன்பியம் 3

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் மறைவட்ட இயக்குநர்கள்



அருள்பணி. D.
பெஞ்சமின்
முளகுமூடு



அருள்பணி. M.
கலிஸ்டஸ்
மாத்திரவிளை



அருள்பணி. K.
பிரைட் சிங்
காரங்காடு



அருள்பணி. ஜீஸ்
ரைமண்ட்
புத்தன்கடை



அருள்பணி. W.
ஒய்சிலின் சேவியர்
திரித்துவபுரம்



அருள்பணி.
பெர்டின் அனஸ்
வேங்கோடு

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் நிர்வாகிகள்



திரு S. பிரான்சிஸ் கென்னடி
தலைவர்
முளகுமூடு



திருமதி. K. மரிய ரெத்தின பாய்
செயலர்
மாத்திரவிளை



திரு. V. ஜெகதீஷ் பிரபு
பொருளர்
காரங்காடு



திரு. N.R. அமல் ராஜ்
துணைத்தலைவர்
புத்தன்கடை



திருமதி பிறேமா குமாரி
துணைச் செயலர்
திரித்துவபுரம்



திருமதி. R. ஜெயந்தி
நிர்வாக குழு உறுப்பினர்
வேங்கோடு

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் செயற்குழுவினர்

## மாத்திரவிளை மறைவட்டம்



K. மரிய ரெத்தின பாய்

தலைவர்



M. ஜெயந்தி

செயலர்



Y. செல்லம்

பொருளர்



M. ஆன்றணி சேவியர்

துணைத் தலைவர்



S. ஜீவராணி

துணைச் செயலர்

## புத்தன்கடை மறைவட்டம்



N.R. அமல்ராஜ்

தலைவர்



G.M.ஷெர்லின்

செயலர்



ஃப்ளோரிடா மேரி

பொருளர்



T. ஸ்டீபன்

துணைத் தலைவர்



M. சதீஷ்

துணைச் செயலர்

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் செயற்குழுவினர்

## காரங்காடு மறைவட்டம்



ஜூடு பென்சிகர்

தலைவர்



அனிலா

செயலர்



ஜெமிலா ரோஸ்

பொருளர்



V. ஜெகதீஷ் பிரபு

துணைத் தலைவர்



S. ஆன்றோ பென்சி

துணைச் செயலர்

## புத்தன்கடை மறைவட்டம்



A. ஜொரால்டு சேவியர்

தலைவர்



T. அனிதா

செயலர்



S.V.அமலதாஸ்

பொருளர்



றோஸ்மேரி

துணைத் தலைவர்



R. ஜெயந்தி

துணைச் செயலர்

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் செயற்குழுவினர்

## திரித்துவபுரம் மறைவட்டம்



ஜெகன் பாபு

தலைவர்



பிரோம குமாரி

செயலர்



வினு

பொருளர்



புஷ்பலீலா

துணைச் செயலர்

## முளகுமூடு மறைவட்டம்



S. பிரான்சிஸ் கென்னடி

தலைவர்



P. சேவியர் சுரேஷ் பாபு

பொருளர்



M. சித்ரா

துணைச் செயலர்

# குழித்துறை மறைமாவட்ட அன்பியப் பணிக்குழுவின் களப்பணியாளர்கள்



S. ஜாண் பெல்லார்மின்

முளகுமூடு



S.T. டேவிட் ராஜ்

மாத்திரவிளை



M. லிசி

காரங்காடு



M . லில்லி மேரி ஜெனட்

புத்தன்கடை



T . ஷீலா

திரித்துவபுரம்



K. ஆல்பின் ஜோஸ்

வேங்கோடு

# இறைவா புகழ்!

# YOU TUBE

https://www.youtube.com/@anbiyamkuzhithuraidiocese945

# Website

bcckuzhithurai.com

# E-mail ID

bcckuzhithuraigmail.com

# Office No.
# +91 7358947467